முரசொலி பாசறை

மதுரை 06.10.2023

# திராவிட சினிமா 26

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

படங்கள் உதவி : ஞானம்





# மணிமகுடம்

## தமிழ் சினிமாவின் திராவிட நாயகர்கள்!

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

நாற்பதுகளின் பிற்பகுதியில் தமிழ் சினிமாவின் நாயகர்கள் பெரும்பாலும் திராவிட நாயகர்களாக இருந்தனர் என்பது கவனத்துக்குரியது. கே.ஆர்.ராமசாமி, என்.எஸ்.கிருஷ்ணன், எம்.ஜி.ராமச்சந்திரன், சிவாஜி கணேசன், எஸ்.எஸ்.ராஜேந்திரன், எம்.ஆர்.ராதா என பிரபல நடிகர்கள் அனைவரும் நேரடியான திராவிடத் தொடர்பு கொண்டவர்கள் அல்லது தீவிர வெளிப்படையான ஆதரவாளர்கள்.

அநேகமாக சிவாஜி கணேசன் தடம்புரண்ட 1950-களின் பிற்பகுதி வரை, இந்த நிலையே தொடர்ந்தது. அவரும்கூடக் கட்சியிலிருந்து விலகிய பிறகும் கலைஞரது திரைப்படங்களில் நடித்துக் கொண்டிருந்தார். இவர்களது திரைப்படங்கள் நேரடியான திராவிடக் கருத்தியல் பேசாதவையாக இருந்த போதும், என்.எஸ்.கே, எம்.ஜி.ஆர், எஸ்.எஸ்.ஆர், எம்.ஆர்.ராதா உள்ளிட்டோர் தங்களது பகுத்தறிவுவாத சார்பை மறைமுகமாகவேனும் தொடர்ந்தனர்.

அனைத்து பிரபல நாயக நடிகர்களும் திராவிட சார்பாளர்கள் என்பதன் மறைமுக விளைவினைத் தனித்ததொரு ஆய்வாகவே செய்யவேண்டும். ஒரு அறிமுக நிலை ஆய்வுப் பார்வையில், பொதுவான இந்தப் போக்குக்குத் திரைப்படங்களில் பாவேந்தர் பாரதிதாசன், உடுமலை நாராயணக் கவி, மாயவநாதன், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், கண்ணதாசன் போன்றோர் இந்த நாயகர்களுக்காக எழுதிய பாடல்களும் பங்களித்தன.

### குரலில் வலிமை, நடிப்பில் குறைவு!

இப்போது இவர்கள் இல்லாமல் வேறு யார் தமிழ் சினிமாவில் பிரபலமான நாயக நடிகர்களாக இருந்தார்கள் எனும் கேள்வியைக் கேட்டுப் பார்த்தால், அதிர்ச்சி அடைய வாய்ப்பிருக்கிறது. மிகுந்த தேடுதலுக்குப் பிறகு ஜெமினி கணேசன் போன்ற ஓரிருவரை அடையாளப்படுத்தலாம். அவர்களும் வெகுசில படங்களில் மட்டுமே நடித்திருப்பர். மற்றபடி அவர்கள் பெரும்பாலும் இரண்டாம் நாயகர்களாகவே தொடர்ந்திருப்பர்.

கெடுவாய்ப்பாக இந்த இரண்டாம் நாயக நிலையில் தொடர வேண்டிய சூழல் எஸ்.எஸ்.ராஜேந்திரன் என்ற திராவிட நாயக நடிகருக்கும் நேர்ந்தது. சிவாஜி கணேசனுடன் அவரும் ‘பராசக்தி’ யில் அறிமுகமானவர்தான். அந்தப் படத்திலும் நாயகன் சிவாஜியைவிடக் கூடுதலான அழுத்தத்துடன் திராவிடக் கொள்கைகளை, திட்டங்களைப் பேசி கவனத்தை ஈர்த்திருப்பார்.

தமிழ் சினிமாவில் ‘கணீர்’ குரலில் உச்சரிப்புத் தெளிவுடன் அடுக்குமொழி தமிழ் பேசிய நாயகர்களில் சிவாஜி கணேசனுக்கு இணையானவர். சிவாஜி, எஸ்.எஸ்.ஆர், ஓ.ஏ.கே.தேவர் (அவரும் தி.மு.கழக நடிகர்தான்) ஆகியோரது குரல் சாத்தியங்களே கலைஞருக்கு ஓர் எழுச்சியான வசனப் போர்களை எழுதத் தூண்டியிருப்பதைக் காண முடியும்.

ஆனால், எஸ்.எஸ்.ஆர் முதல் நிலை நாயக நிலையை எட்ட இயலவில்லை. குரல் வலிமை நடிப்பில் கொஞ்சம் குறைவுதான். ஆனால், அறுபதுகளின் தொடக்கம் அவருக்கான நாயகத்துவ திரைப்படங்களை கலைஞர் உருவாக்கிக் கொடுத்தார். சென்ற வாரங்களில் கண்ட திரைப்படங்களின் பட்டியலே அதற்குச் சான்றாகும். எஸ்.எஸ்.ஆர் தீவிரமான கொள்கைப் பற்றானவராகவும் இருந்தார். தி.மு.க. சார்பில் தேர்தலில் நின்று 1962-ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினரான தமிழ்நாட்டின் முதல் நடிகர் அவரே.

### திரைக்கதையும் இயக்குநரும்

1966-ஆம் ஆண்டு வெளியான **‘மணிமகுடம்’** திரைப்படமும் அவற்றில் ஒன்று. கலைஞர் எழுதி பலமுறை அரங்கேறிய நாடகத்தை எஸ்.எஸ்.ஆர் அவர்கள் திரைப்பட வடிவில் உருவாக்கியிருந்தார். அவரது முதல் இயக்குநர் முயற்சி.

கதைக்களம் எளிமையானதும் நேரடியானதும்தான். மன்னனின் அதிகாரத்தை மோசடியாகக் கையாண்டு, மக்களை வதைக்கும் குருநாதர் (நம்பியார்), திவான் (எஸ்.ஏ.நடராஜன்), படைத்தளபதி கூட்டணி. மணிபல்லவபுரியின் மக்கள் விடுதலைக்காக வன்முறையற்ற வழிகளில் போராடும் மன்றம். மன்றத்தின் தலைமை அல்லி (விஜயகுமாரி), ஆலோசகர் பி.எஸ்.வீரப்பா.

**‘ஐயாயிரம் குடிசைகளை அழித்துவிட்டு ஆலயம் கேட்பது ஆண்டவனாக இருக்க முடியாது’; போராளி புரட்சிக்கவி, அரச பரம்பரையே அழிக்கப்பட வேண்டும்.**

அநீதியான அரசனின் ஆணையால், கொல்லப்பட்ட அண்ணன் உள்ளிட்ட ஐந்து போராளிகளின் மரணத்துக்குப் பலி வாங்க அக்காவும் தங்கையும் (ஜெயலலிதா) முனைந்து களம் காண்கின்றனர். படத்தில், பெண்களின் செயலூக்கமான நடவடிக்கைகள் திராவிட மாடல் சினிமாவின் இன்னொரு உதாரணம். மன்னன் தனது தவற்றை உணர்ந்து நாசகார கூட்டத்தின் சதியை முறியடித்து, நாட்டில் மக்களாட்சி மலரச் செய்கிறான்.

### எம்.ஜி.ஆர் பாணியை முயன்ற எஸ்.எஸ்.ஆர்

மன்னன் மணிமாறனின் மாற்றுத் திட்டங்களில் பல மாறுவேடப் புனைவுகள். அந்தப் புனைவினை உண்மையென நம்பும் அக்கா அல்லி, புதுமைப்பித்தன் எனும் புரட்சிக்காரனைக் காதலிக்க, தங்கை ஜெயலலிதா அரசனை மயக்கி, அரண்மனைக்குள் புகுந்து பழிவாங்கத் திட்டமிட்டு, மன்னனின் நற்குணங்கள் அறிந்து காதலில் வீழ்கிறாள்.

இரண்டு நாயகிகள், ‘தாடி ஒட்டி’ மாறுவேடம் எனும் சரக்குகள் ஏற்கெனவே எம்.ஜி.ஆர் பாணியாக மாறி உறுதியாகியிருந்த நிலையில், எஸ்.எஸ்.ஆர் இயக்கம் அதனைத் தனதாக்கிக் கொள்ள முயன்றிருப்பது வெளிப்படை. போதாக்குறைக்கு எம்.ஜி.ஆர் நாயகியாகி விட்டிருந்த ஜெயலலிதாவை தனக்கு ஜோடியாக்கியது அடுத்தப் பிழை. இது மட்டுமல்ல, நாடகப் பிரதியைத் தன்னை முதன்மை நாயகனாக்கும் முயற்சிக்குப் பலவாறாக மாற்றியமைத்திருக்கிறார்.

எம்.ஜி.ஆர் போலவே எந்தவித ‘கெட்டப் பழக்கமும்’ இல்லாத, மக்கள் நலன் கருதும் மன்னன். ஏன் தன்னைச் சுற்றியுள்ள சதி வலையை அறியாமல் இருக்கிறான் என்பதற்கு, எந்தத் தெளிவான காரணமும் பேசப்படுவதில்லை. அதேபோல அதிகாரம் கொண்ட மன்னன், ஏன் பிரபுக்கள் அவைக்கு வராமல் இருக்கிறான். அந்த அவையில், அவன் முடிவாக ஆணையாக (போலி ஆணைகள்) நிறைவேற்றப்படும் அநீதிகளைத் தடுக்க நேரடியான அதிகாரத்தைப் பயன்படுத்தாமல், போராட்டக்காரர்கள் மன்றத்தினரிடம் ஏன் இணைகிறான் என்பதற்கும் ஒரே விடைதான்.

தனக்கான நாயகத்துவ உருவாக்க முனைப்புத் திரைக்கதையில் பல குழப்பங்களை உருவாக்கி விட்டிருக்கிறது. அதன் விளைவாக, திரைப்படத்தின் வெற்றி மற்றும் நாயகத்துவ உருவாக்கம் ஆகிய இரு தளங்களிலும் எதிர்பார்த்தது நிகழவில்லை.

### பலமான திரைக்கதை, பலவீனமான இயக்கம்

திரைக்கதை உருவாக்கம் ஒரு தடம் என்றால், அதனைச் செழுமைப்படுத்தும் பணி இயக்குநருடையது. திரைப்படத்தின் மையப் பொருளான **எளியவர்களின் வாழ்விடத்தை அழித்து, ஆண்டவனுக்கு ஆலயம் கட்டும் அதிகாரம் எனும் இன்றும் பொருந்தும் களம் முறையாகக் கையாளப் படவில்லை.** இத்தனைக்கும் கலைஞரின் முத்திரை வரிகள் ஏராளம்.

‘ஐயாயிரம் குடிசைகளை அழித்துவிட்டு ஆலயம் கேட்பது ஆண்டவனாக இருக்க முடியாது’; போராளி புரட்சிக்கவி, அரச பரம்பரையே அழிக்கப்பட வேண்டும். அரச பரம்பரையை ஒழிப்பதென்றால், புராண காலத்து பரசுராமன் போல கையில் கோடாரியேந்தி கண்டவரைக் கொன்று குவிப்பதல்ல. அழிப்பதென்றால், மன்னன் பற்றிய மூடநம்பிக்கைகள் நீக்கப்பட்டு, மக்களாட்சி மலர்வதற்கான மனப்பாங்கை உருவாக்குவதுதான்’.

ஆம், திராவிடத்தின் ‘ஒழிப்பு’ நடவடிக்கை, அன்றும் இன்றும், அது மன்னராட்சியானாலும், சனாதனமானாலும் வன்முறையை நாடாதது. பரசுராமன் வாரிசுகள் மற்றும் அவர்தம் எடுபிடிகள் இதை அறியமாட்டார்கள்.

...படம் விரியும்

### ஊடக அச்சுறுத்தல் ஒரு பாசிச நடவடிக்கை!

‘நியூஸ் க்ளிக்’ என்கிற ஊடகத்தினர் சீனாவுக்கு ஆதரவாகவும், இந்திய அரசுக்கு எதிராகவும் பிரச்சாரம் செய்வதாகக் கூறி, அவர்களின் தொடர்புடைய இடங்களில் சோதனைகளைச் செய்ததுடன், அதன் தலைவர் பிரபிர் புர்கயஸ்தாவை டெல்லி போலீசார், சட்டவிரோதச் செயல்பாடுகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளனர். முன்னதாக அந்த ஊடகத்துடன் தொடர்புடைய மூத்தப் பத்திரிகையாளர்கள் அனுராதா ராமன், சத்யம் திவாரி, அதித்தி நிகாம், சுமேதா பால் எனப் பலரும் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

மூத்தப் பத்திரிகையாளர் பரஞ்சோய் குஹாவிடம் ஏ.என்.ஐ. செய்தி நிறுவனம் மைக்கை நீட்டியதும், அவர் ‘மோடிஜி ஒரு மகான்... வாங்க கேளுங்க... அதுதானே உங்களுக்கு வேணும். மோடிஜி கடவுளோட அவதாரம்... போதுமா?’ என மோடி மீடியாவைக் கிண்டல் செய்கிறார்.

நேர்மையான ஊடகவியலுக்கும், ஜால்ரா ஊடகவியலுக்கும் இடையிலான மோதலாக ‘நியூஸ் க்ளிக்’ மீதான அடக்குமுறை அமைந்துள்ளது, என எதிர்க்கட்சிகள் விமர்சிக்கின்றன. இந்தச் சூழலில் ‘நியூஸ் கிளிக்’ பத்திரிகையாளர்கள் நடந்துகொண்ட விதம் ஒரு நீண்ட வீரஞ்செறிந்த மரபின் தொடர்ச்சியே. ஊடகங்களை அச்சுறுத்தும் இந்தப் பாசிச நடவடிக்கையை முறியடிக்க இந்தியா தயாராகிறது.

### :.ப்ளாஷ்பேக்





பாலசுதர்சனம்

### அறிவாலயத்தில் ஆசி!

இன்றைய காஞ்சிபுரம் மாவட்டம், 1995-இல் செங்கை அண்ணா மாவட்டமாக இருந்தது. அப்போது சித்தாமூர் ஒன்றியத்தைச் சேர்ந்த விவசாய அணி அமைப்பாளர்களும், துணை அமைப்பாளர்களும் தலைவர் கலைஞரை சென்னை, அண்ணா அறிவாலயத்தில், 1995 ஏப்ரல் 5-ஆம் நாள் சந்தித்து வாழ்த்து பெற்றனர். அப்போது, பேராசிரியர் அவர்களும் ஆற்காட்டார் அவர்களும் உடனிருந்தார்கள். விவசாய அணி துணை அமைப்பாளராக இருந்த எனது தந்தை கிருஷ்ணன், இந்தப் படத்தைக் காட்டித்தான் எங்களுக்குக் கட்சிப் பாசத்தை ஊட்டினார். அவரது மகனாக இன்றைக்கு நானும் கழகப் பணியைத் தொடர்கிறேன்.

**-கி.பாலசுதர்சனம்,**
**ஒன்றிய மாணவரணி துணை அமைப்பாளர், சித்தாமூர் ஒன்றியம்,**
**காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

**தளராத முரசொலி**

**1965-ஆம் ஆண்டு மார்ச் மாதம், முரசொலியில் வெளியான சில கட்டுரைகள், படங்கள் ஆகியவற்றைக் காரணம் காட்டி இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் முரசொலி மாறன் கைது செய்யப்பட்டார். அதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் கலைஞர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், ‘முரசொலி’ பணிகளைத் தொய்வில்லாமல் கவனித்து வந்தார், அப்போது துணையாசிரியராக இருந்த மாறன். அவரின் கைதுக்குப் பின்னரும், ஆசிரியர் பகுதியில் பணியாற்றிய அனைவரும் குழுவாக இணைந்து ‘முரசொலி’யில் எழுச்சி குறையாது பணியாற்றினர்.**

### திராவிடத்தால் வாழ்கிறோம் 261




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.